# மருத்துவம் பயில வெ. 3 லட்சமா?



கோலாலம்பூர், செப். 14– நாட்டில் மாணவர் ஒருவர் மருத்துவப் படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றால், கோலாலம்பூரில் தரைவீடு ஒன்றை வாங்கும் அளவிற்கு குறைந்தது 3 லட்சம் வெள்ளியை செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள தனியார் மருத்துவ மனைகளில் உள்ள மருத்து வர்கள் நோயாளிகளைத்

தொடர்ச்சி பக்கம் 6

# மருத்துவம் பயில...

தொடுவதற்குக்கூட அதிகக் கட்டணம் வாங்குவதற்கு இதுவே முக்கியக் காரணமாக விளங்குகிறது என்று ஃபிரி மலேசியா டுடே இணையத்தள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு எவ்வளவு கட்டணத்தை வசூலிக்கிறார்கள் என்பதை இனி பார்ப்போம்.

ஃபிரி மலேசியா மேற்கொண்ட ஓர் ஆய்வில் நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மருத்துவம் பயில்வதற்கு குறைந்தது 2 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி முதல் 10 லட்சம் வெள்ளி வரை கட்டணமாக வசூலித்து வருகிறது என்பதும் அம்பலமாகியுள்ளது.

அதன் விவரங்கள் பின்வருமாறு:–

* பேரா குயிஸ்ட் அனைத்துலக பல்கலைக்கழகம் – வெ. 249 ஆயிரம்.
* துங்கு அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகம் – வெ. 255 ஆயிரம்.
* ஏம்ஸ்ட் பல்கலைக்கழகம் – வெ. இரண்டரை லட்சம்.
* கோலாலம்பூர் பல்கலைக்கழகம் – வெ. 280 ஆயிரம்.
* யுனி.கே.எல்.– விநாயாக மிஷன் பல்கலைக்கழகம் –வெ. 3 லட்சம்.
* யு.சி.எஸ்.ஐ. பல்கலைக்கழகம் – வெ. 320 ஆயிரம்.
* டெய்லர்ஸ் பல்கலைக்கழகம் – வெ. 353 ஆயிரம்.
* அனைத்துலக மருத்துவ பல்கலைக்கழகம் – வெ. 410 ஆயிரம்.
* நிர்வாக – அறிவியல் பல்கலைக்கழகம் – வெ. 410 ஆயிரம்.
* பெர்டானா பல்கலைக்கழகத்தின் ஐயர்லாந்து அரச மருத்துவக் கல்வி – வெ. 8 லட்சம்.
* ஹோப்கின்ஸ் மருத்துவ பல்கலைக்கழகம் – வெ. 10 லட்சம்.
* செகி பல்கலைக்கழகம் – வெ. 3 லட்சம்.
* மெட்ரோபோலிட்டன் ஆசிய பல்கலைக்கழகம் – வெ. 3 லட்சம்.
* சன்வே மோனஸ் பல்கலைக்கழகம் – வெ. 455 ஆயிரம்.
* மலேசிய நியூகேஸ்டல் மருத்துவ பல்கலைக்கழகம் – 450 ஆயிரம்.
* ஏலியன்ஸ் மருத்துவ பல்கலைக்கழகம் – வெ. 279 ஆயிரம்.
* அதன் யு.கே.எம். மருத்துவக் கல்வி – வெ. 338 ஆயிரம்.
* அதன் வட சுமத்ரா பல்கலைக்கழகம் – வெ. 279 ஆயிரம்.
* அதன் ஐயர்லாந்து – கால்வே பல்கலைக்கழகம் – வெ. 578 ஆயிரம்.
* அதன் கோர்க் மருத்துவக் கல்லூரி – வெ. 578 ஆயிரம்.
* சைபர்ஜெயா அறிவியல் – மருத்துவ பல்கலைக்கழகம் – வெ. 275 ஆயிரம்.
* லின்கோல்ன் பல்கலைக்கழகம் – வெ. 324 ஆயிரம்.
* ஷாபுத்ரா மருத்துவக் கல்லூரி – வெ. 240 ஆயிரம்.
* மலாக்கா மணிப்பால் கல்லூரி – வெ. 348 ஆயிரம்.
* பினாங்கு மருத்துவக் கல்லூரி – வெ. 6 லட்சம்.

மேற்கண்ட கட்டணத்தைத் தவிர்த்து மருத்துவம் பயிலும் மாணவர்களின் தங்குமிடம், புத்தகம், போக்குவரத்து, உணவு உட்பட இதர செலவுகளுக்காக மேலும் ஒரு லட்சம் வெள்ளியை செலவிட வேண்டும்.